# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

*************

**ஊடக அறிக்கை**

**இந்தியாவின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன ஏற்பாட்டில் கொவிட்டின் பின்னரான பொருளாதார மீட்சி குறித்த காணொளி மாநாடு**

தெற்காசிய பிராந்திய வர்த்தக மேம்பாட்டு தோற்றப்பாடுகள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் கொவிட் 19இன் பின்னரான வாய்ப்புக்கள் ஆகியவை குறித்த காணொளி மாநாடொன்று (Video Conference ) இந்தியாவின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் (PHD Chamber of Commerce and Industry of India ) ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது.

இந்திய உயர் ஸ்தானிகராலய பொருளாதார மற்றும் வர்த்தக பிரிவின் தலைமை அதிகாரி திருமதி சுஜா கே மேனன் அவர்கள் இந்த காணொளி மாநாட்டில் பங்கேற்றிருந்தார். நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் உள்ள இந்திய இராஜதந்திர அலுவலகங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

கைத்தொழில் துறையினருக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலானதும், இந்தியாவுக்கும் இந்தியாவின் பங்காளிகள் மற்றும் நட்பு நாடுகள் ஆகியவற்றிற்கும் இடையிலானதுமான பரந்தளவிலான கூட்டுமுயற்சியில் கொவிட் நோய்க்கு பின்னரான பொருளாதார மீட்சியானது தங்கியிருப்பதாக திருமதி சுஜா கே மேனன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் கண்டுபிடிப்புக்கள், வியத்தகு தொழில்நுட்பம் ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகவும் தெரிவித்திருந்த அவர் இரு நாடுகளினதும் பொருளாதார எதிர்காலத்தை கட்டமைக்கும் செயற்பாட்டில் இலங்கை மற்றும் இந்தியாவில் உள்ள இளைஞர்கள் முக்கிய வகிபாகத்தை கொண்டிருப்பதாகவும் நம்பிக்கையினை வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன் இந்திய வர்த்தக நிறுவனங்களின் உலகளாவிய வலையமைப்பு மற்றும் விநியோக மார்க்கங்களில் இணைந்துகொள்ளல் அதேபோல பாரிய இந்திய சந்தையினை பயன்படுத்துவதற்காக பூகோள ரீதியான அமைவின் வாய்ப்புக்களை இலங்கை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும் திருமதி மேனன் சுட்டிக்காட்டினார். அதுமட்டுமல்லாது இலங்கையில் பல்வேறு தசாப்தங்களாக சில இந்திய

நிறுவனங்கள் இயங்கி வருவதுடன் எக்காலத்திலும் அவை இலங்கையில் தமது பிரசன்னத்தை கொண்டிருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார். இலங்கையின் சொந்த தேவை அடிப்படையில் மக்களை இலக்கு வைத்த அபிவிருத்தி திட்டங்களை இலங்கையுடன் தொடர்ந்து முன்னெடுப்பதில் இந்தியாவின் உறுதிப்பாட்டையும் அவர் மீண்டும் வலியுறுத்தி கூறியுள்ளார்.

கைத்தொழில் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் செயலாளர் திரு. அஜித் பெரேரா இந்த காணொளி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார். அதேபோல நேபாளம் வர்த்தக சம்மேளனம், பங்களாதேஷ் வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

****************

கொழும்பு
01 மே 2020